மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற இந்தக் காலத்தில்தான் உருவாக்கப்பட்டன என்பதை இந்த மாமன்றத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பறக்கையில் தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத்தின்கீழ் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் செயல்பட்டு வருகிறது. இவற்றின்மூலம் மாவட்ட மீனவர்களுக்கு மீன் வளர்ப்பான் பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும், மீன் வள தொழில் தொடங்குவதற்கான தேவையினை ஆராய்ந்து, ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு ராஜாக்கமங்கலம் அருகில் உள்ள கணபதிபுரத்தில் நோய் தாக்காத 'தாய் இறால் வங்கி' அதாவது, Shrimp Brood Bank ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் அமைக்க, 7 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பணிகள் துவங்கவிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் மாமன்ற உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, குளச்சலில் மீன் வளக் கல்லூரி அமைப்பதற்கான அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***30133—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், புளியம்பட்டி கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 மார்ச் 31]

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்து, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) பல்லடம் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதிக்குட்பட்ட 93 சங்கங்களில் திருப்பூர் பால் குளிரூட்டும் நிலையத்திற்குட்பட்ட 55 சங்கங்கள் மூலமாக தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 17,168 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு ஈ.டி. 1,116 கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. பல்லடம் ஊராட்சி ஒன்றியம், புளியம்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே சிபிடி 84 புளியம்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும், மேற்படி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து நாளொன்றுக்கு சராசரியாக 700 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, மாவட்ட ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணையின் பிறப்பிடம், தருமத்தின் இருப்பிடம், திக்கற்றோருக்கு தீபவொளி, கழகத்தின் காவல் தெய்வம், மக்களின் முதல்வரே, (மேசையைத் தட்டும் ஒலி) பாரதத்தின் வழிகாட்டியே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி சபைக்கு வரும் முன்பே பால் கூட்டுறவுச் சங்கத்தைத் துவக்கி சிறப்பாக நடத்துவதற்கு ஆணையிட்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தில் 550 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 300 சங்கங்களிலிருந்து கோவைக்கு சுமார் 1 இலட்சம் லிட்டர் பாலும், சுமார் 250 சங்கங்களிலிருந்து ஈரோட்டுக்கு சுமார் 70,000 லிட்டர் பாலும் அனுப்பப்படுகிறது. ஆகவே, கோவை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திலிருந்தும், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திலிருந்தும் பிரித்து, திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தைத் துவக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று ஆவன செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

மேலும், ஈரோடு மாவட்டத்திலிருந்து திருப்பூர் மாவட்டத்திற்கும், கோவை மாவட்டத்திலிருந்து திருப்பூருக்கும், தினமும் அனுப்பப்படுகின்ற 1,70,000 லிட்டர் பாலானது, திருப்பூர் நகரத்திற்கு மட்டும் தினமும் 50,000 லிட்டரும், திருப்பூர் புறநகர்ப் பகுதிகளுக்கு 50,000 லிட்டரும், ஆக, 1,00,000 லிட்டர் பால் திரும்பவும் திருப்பூர் மாவட்டத்திற்கே கொண்டு வரப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 32 வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கி, 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், கோவை, ஈரோடு வருவாய் மாவட்டங்களிலிருந்து, திருப்பூர் வருவாய் மாவட்டம் பிரிந்த பின்பு கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்துடனும், ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்துடனும் இணைந்து திருப்பூர் வருவாய் மாவட்டம் செயல்பட்டு வருகிறது.

பெருவாரியான மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் 2 வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகின்றன. மேலும், திருப்பூர் மாவட்டத்தில் மொத்தம் 2 பால்

குளிரூட்டும் நிலையங்கள் (Chilling Centres) செயல்பட்டு வருகின்றன. இதில் ஒன்று, 10,000 லிட்டர் கொள்ளளவுடன் திருப்பூரில் செயல்பட்டு வருகிறது. பால் வரவு 15,000 லிட்டர் மட்டும். இதில் பாதி கோவைக்கு அனுப்பப்படுகிறது. மற்றொன்று, சங்கராந்தல்பாளையத்தில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுடன் செயல்பட்டு வருகிறது. பால் வரவு 45,000 லிட்டர் மட்டும்.

திருப்பூர் மாவட்டத்தில் 18 மொத்த பால் குளிர்விப்பான்கள் (Bulk Milk Coolers) செயல்பட்டு வருகின்றன. திருப்பூர் மாவட்டத்தில் உற்பத்தியாகும் பால் ஈரோடு மற்றும் கோவை மாவட்டங்களுக்குப் பதப்படுத்துவதற்காக அனுப்பப்படுகின்றது. திருப்பூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர் இடங்களுக்கே சென்று ஒன்றியப் பணியாளர்களால் பால் முழுமையாகச் சேகரிக்கப்பட்டு ஒன்றியங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இதன்மூலம் திருப்பூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர் நலன் முழுமையாகப் பாதுகாக்கப்படுகிறது. மேலும், பால் உற்பத்தித் தொழில் தொய்வின்றி செவ்வனே நடைபெற்று வருகின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, திருப்பூர் மாவட்டத்திற்கென்று புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் அமைப்பது குறித்து, அவசியம் மற்றும் தேவையின் அடிப்படையில் ஆய்வு செய்து, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் ஆணைகள் பெற்று தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

முற்பகல் 11-15

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*